Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

Jegajothi
TOOTH POWDER
SEGAR & Co. MADURAI
ஜெகஜோதி பல்பொடி
சேகர் அன் கோ. மதுரை

போன்: 389 | National TAMIL DAILY | தேசிய தினசரி | தபாற் பெட்டி எண்: 49

மலர் 3 | யாழ்ப்பாணம், சார்வரி பங்குனி 3-ஆம் நாள் றம்ழான் 28 (16-3-61) வியாழக்கிழமை | இதழ் 29

# பங்கீட்டு அரிசி அளிக்க

## அரசாங்கத் தீர்மானம்

### சம்பளம் முதலியவை வழங்கவும் ஏற்பாடு

**கொழும்பு, மார்ச் 15**

**யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருக்கோணமலை முதலிய இடங்களில் பங்கீட்டு அரிசி வழங்க பாதுகாப்புசட்டத்தின் 3வது விதிப்படி ஏற்பாடு செய்திருக்கிறதாக, மந்திரி சபையின் தற்காலிகத் தலைவர் திரு. சி. பி. டி' சில்வா இன்று வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.**

**சி. பி. டி' சில்வா அறிக்கை**

அத்தியாவசிய உணவுப் பொருள் விநியோகம், அரசாங்க ஊழியர்களின் சம்பளம், பென்ஷன் சம்பளம், தர்மப் பணம் ஆகியவைகள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வழங்குவதற்கு அரசாங்கம் சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் என்று அரசாங்கத்தின் தற்காலிக தலைவர் திரு. ஸி. பி. டி' சில்வா அறிவித்துள்ளார்.

இவைகளை வழங்குவதற்கு அவசியமேற்பட்டால் பொது ஜன பாதுகாப்புச் சட்டத்தின் மூன்றுவது பிரிவின்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் திரு. சில்வா தெரிவித்துள்ளார். இன்று பிற்பகல் ஜனப்பிரதிநிதிகள் சபைகூடிய பொழுது அரசாங்கத்தின் தற்காலிக தலைவர் திரு. சி. பி. டி' சில்வா வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நடைபெற்று வரும் சத்தியாக்கிரக இயக்கம்பற்றி ஒரு அறிக்கையை வெளியிட்டார். அதில் அவர் குறிப்பிட்டதாவது:-

(6ம் பக்கம் பார்க்க)

செனட்டில்

## நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோல்வி

கொழும்பு, புதன்

செனட் சபையில் எதிர்க் கட்சியினர் அரசாங்கத்தின்மீது நம்பிக்கையில்லையென்று கொண்டுவந்த தீர்மானம் சாதகமாக 9 வாக்குகளும் பாதகமாக 16 வாக்குகளும்பெற்றுத் தோல்வி அடைந்தது.

## கொழும்பில் பலத்த மழை

கொழும்பில் நேற்று புதன் கிழமை மாலை ஒன்றரை மணி நேரத்தில் 3 அங்குல மழை பெய்தது. பெரிய மரங்கள் வேருடன் சாய்ந்து போக்குவரத்துக்கு தடை ஏற்பட்டது.

## தமிழரசு எம். பி.க்களுக்கு 3 மாத விடுமுறை

**தமிழரசுக்கட்சி எம். பி.க்களுக்கு 3 மாத விடுமுறைகொடுக்கவேண்டுமென்று நேற்று பார்லிமெண்டில்யாழ்ப்பாண மெம்பர் திரு. ஏ. ரி. துரையப்பாஒருபிரேரணை கொணர்ந்தார்.**

திரு. பிலிப் குணவர்த்தனவும் அவரது சகோதரர் ராபர்ட்டும் இதை எதிர்த்தனர்.

இவ்வித தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றுவதே நீடித்த சம்பிரதாயமென்றும் எதிர்ப்பது வழக்கமில்லை என்றும் டாக்டர் என். எம். பெரேரா கூறினர்.

முடிவில் பிரேரணை ஓட்டுக்குவிடப்பட்டது. அரசாங்கக் கட்சி மெம்பர்கள் வாக்களிக்கவில்லை. திரு. தொண்டமான் பிரேரணையை ஆதரித்தார். இரு குணவர்த்தனக்களைத் தவிரஎதிர்க்கட்சியினர் ஆதரிக்க பிரேரணை நிறைவேறியது.

தமிழரசுக்கட்சி எம். பி. க்களுக்கு விடுமுறை வழங்கும் பிரேரணைமீது டாக்டர் என். எம்' பெரேராவுக்கும் திரு. பிலிப் குணவர்த்தனவுக்குமிடையில் பலத்த வாக்குவாதமேற்பட்டது.

## 'தியாகம் செய்ய வேண்டிய வேளையில் வேடிக்கைக்கு இடமில்லை'

**— தலைவர் எஸ். ஜே. வி.**

யாழ்ப்பாணம், வியாழன்

"கட்டுப்பாடு, ஒழுங்கு, கண்ணியம் ஆகியவற்றேடு தியாகஞ் செய்யவேண்டிய இந்நேரத்தில் வேடிக்கைகளுக்கு இடமில்லை" என்று தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் "ஈழநாடு" நிருபர் மூலம் விடுத்த செய்தியொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் வாடிவீட்டில் திரு. செல்வநாயகத்தை நமது நிருபர் நேற்றுக்காலை சந்தித்தபோது தமிழ் உரிமைப் போராட்டத்தைப் பற்றி அவர் வெளியிட்ட கருத்துக்கள் வருமாறு:-

மொழியுரிமை பறிக்கப்பட்டு வீடு தீப்பற்றி எரிகின்ற நேரத்தில் மாட்டுவண்டி ஊர்வலங்களும் அவசியமற்ற வேறு ஊர்வலங்களும் நடத்துவது சரியல்ல. கட்டுப்பாடு, ஒழுங்கு, கண்ணியம் ஆகியவற்றேடு தியாகஞ் செய்யவேண்டிய இந்நேரத்தில் வேடிக்கைகளுக்கு இடமில்லை என்று கண்டிப்பாகக் கூற விரும்புகிறேன்.

நாங்கள் எங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியை உணர்ந்து உரிமைப் போராட்டத்தில் முழுமனதுடன் கலந்துகொள்ளுகிறேம் என்ற உணர்ச்சியைக் காட்ட ஊர்வலங்கள் நடத்தலாம். ஊர்வலத்தின் போது மற்ற எவர் மனதையும் புண்படுத்தும் வகையில் கோஷமிடக்கூடாது. ஊர்வலங்கள் மிகுந்த பயபக்தியுடன் அமைதியாகவும் ஒழுங்காகவும் நடைபெறவேண்டும்.

மாணவர்கள் இவ்விஷயத்தில் தீவிரமாக ஈடுபட்டுத் தமது எதிர்காலத்தை பழுதடையச் செய்யக்கூடாது. மாணவர்கள் ஊர்வலங்களில் பங்குபற்றுவது சரியல்ல. இப்பொழுது அவர்கள் கல்வியில் மட்டும் கவனம் செலுத்த வேண்டும். பள்ளிக்கூடமில்லாத சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமைகளில் அவர்கள் வேண்டுமாயின் ஊர்வலங்களில் மாத்திரம் கலந்துகொள்வது குற்றமாகாது.

## தமிழ் மொழிப் பஜனைக் கோஷ்டி

சுன்னாகம், புதன்

வருகிற (17-3-61) வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் சுன்னாகம் கதிரமலைச் சிவன் கோவிலிலிருந்து தமிழ் மொழிப்பஜனைக் கோஷ்டியார் புறப்பட்டு காங்கேசன்துறை யாழ்ப்பாண வீதி வழியாக யாழ்ப்பாணம் கச்சேரிக்குச் செல்வார்கள்.

## சத்தியாக்கிரகத்தில் சமத்துவம்

### கிளிநொச்சியிலிருந்து 4000 கொத்து அரிசி

யாழ்ப்பாணம், வியாழன்

நேற்றைய சத்தியாக்கிரக இயக்கத்துக்கு செனட்டர் நல்லையாவும் யாழ்ப்பாண உதவி மேயர் திரு. நா. த. செல்லத்துரையும் தலைமை தாங்கினர்கள். திருமதி நல்லையா, திருமதி செல்லத்துரை தலைமையில் பெண் தொண்டர்கள் சத்தியாக்கிரகம் செய்தனர்.

தொகையான தொண்டர்கள் கலந்துகொண்ட நேற்றைய மறியல் இயக்கத்தில் உயர்வுதாழ்வற்ற சமத்துவத்தைக் காணக்கூடியதாக இருந்தது.

சிறுபான்மைத் தமிழர் சமூகத்தைச் சேர்ந்த தலைவர்களின்கீழ் நேற்று நடைபெற்ற சத்தியாக்கிரகத்தின் போது சாதி வித்தியாசம் எதுவுமின்றி சகல சத்தியாக்கிரகிகளும் அருகருகே உட்கார்ந்து நண்பகல் உணவு உட்கொண்டனர்.

**4000 கொத்து அரிசி**

கிளிநொச்சித் தொகுதி எம். பி. திரு. சிவசுந்தரம், கிளிநொச்சி கிராமச் சங்கத் தலைவர் திரு. அன்ரன் சி. பொன்னம்பலம் ஆகியோரின் தலைமையில் சுமார் இரண்டாயிரம் மக்கள் கிளிநொச்சியிலிருந்து கச்சேரிக்கு வந்து சேர்ந்து சத்தியாக்கிரக இயக்கத்தில் கலந்து கொண்டனர். சத்தியாக்கிரகிகள் டிராக்டர்களிலும், வான், லொறி, கார்களிலும் ஊர்வலமாக வந்தனர்.

கிளிநொச்சியிலிருந்து வந்த இரண்டாயிரத்துக்கு மேற்ப

(6-ம் பக்கம் பார்க்க)

## தமிழர் பிரச்சினைகளை அலட்சியம் செய்யாதீர்

### கோப்பாய் கிராமச் சங்கம் கோரிக்கை

கோப்பாய், புதன்

தமிழ்ப்பேசும் மக்களின் கோரிக்கைகளை அலட்சியம் செய்யாமல் நீதியான முறையில் விரைவில் தீர்த்துவைக்கும்படி அரசாங்கத்தை வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒன்று கோப்பாய் கிராமச்சங்கப் பொதுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. கூட்டத்துக்கு தலைவர் திரு. க. இராசரத்தினம் தலைமை வகித்தார்.

தலைவர் பேசுகையில் தமிழ்ப் பேசும் மக்கள் நடத்தும் சாத்வீக இயக்கத்தைத் தளராது உறுதியுடன் தொடர்ந்து நடத்தவேண்டுமென்றும், இன்னல்கள் எதுவரினும் பொருட்படுத்தாது வெற்றி கிடைக்கும்வரை போராடவேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் இப்பொழுது தமிழ் மக்கள் நடத்தும் அறப்போர் சிங்கள மக்களுக்கு எதிரானதல்ல. சிங்கள சகோதரர்கள் பலர் அறப்போரில் கலந்துகொள்வதினின்றும் இது தெளிவாகிறது" என்றார்.

கோப்பாய் கிராமச் சங்க மண்டபத்தின்மீது, போராட்டம் முடியும்வரை கறுப்புக் கொடியைப் பறக்கவிடுவதென்றும், உணவுத் தட்டுப்பாட்டை சமாளிக்கு முகமாக சாமை, குரக்கன் போன்ற சிறுதானியங்களை அதிகமாக உற்பத்தி செய்யும்படி மக்களைத் தூண்டுவதென்றும், வடமாகாணத்திலுள்ள ஸ்தலஸ்தாபனங்களின் உறுப்பினர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து ஒரு நாள் ஊர்வலம் நடத்த ஏற்பாடு செய்வதென்றும் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது. வேறும் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## களுத்துறைத் தமிழர் நன்கொடை

களுத்துறை மாவட்டத்தைச் சேர்ந்த தமிழர் ரூபா 805 கொண்ட பணமுடிப்பை திரு. செல்வநாயகத்திடம் ஒப்படைத்தனர்.

## மணிவாக்கு

ஒவ்வொரு மனிதனின் உள்ளத்திலும் இறைவன் வீற்றிருப்பதால் ஒரு மனிதன் எவ்வளவு மோசமாகக் காணப்பட்டாலும் அவனை மாற்றிவிடலாம் என்ற நம்பிக்கையுடன் நாம் காரியத்தில் இறங்கவேண்டும்.

—விநோபாஜி


# ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் சார்வரி ஆண்டு பங்குனி மீ 3 உ (16-3-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone: 389.


## அரசாங்கக் கட்சி தீர்மானம்

பிரதமர் சிறிமா பிரிட்டனிலிருந்து திரும்பிவரும் வரை சத்தியாக்கிரக பிரச்னையை அப்படியே விட்டு வைப்பதென்று அரசாங்கப் பார்லிமெண்ட் கட்சிக் கூட்டம் செய்துள்ள தீர்மானம் எதிர்பார்க்கப்பட்டது. பிரதமரும், நிதி மந்திரி பீலிக்ஸும் இல்லாத சமயத்தில் இந்த முக்கியமான அரசியல் பிரச்னை குறித்து மற்றவர்கள் எவ்வித திட்டமான காரியத்தையும் செய்யக்கூடிய நிலையில் இல்லை.

இந்த வேளையில் நிலைமையை மோசமாக்கக்கூடிய எவ்விதமான காரியத்தையும் செய்துவிடக் கூடாதென்றும், பிரதமர் திரும்பியதும் எதிர்காலத்தில் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கான சூழ்நிலையைக் கெடுத்துவிடக் கூடாதென்றும் அக்கூட்டம் தீர்மானித்துள்ளது. என்றாலும் இதற்கு நேர்மாறாக அரசாங்கம் பங்கீட்டு அரிசியை வழங்க மறுத்துள்ளதால், நிலைமை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மிகவும் மோசமாகியுள்ளது. பிரதமர் சிறிமா இங்கு இருக்கையில், சத்தியாக்கிரகம் நடந்துவந்தாலும், பங்கீட்டு அரிசிக்கான உத்தரவுப் பத்திரங்கள் வழங்குவதை நிறுத்தவில்லை. ஆனால் அவர் இத்தீவை விட்டுச் சென்றுள்ள வேளையில், சில அவசரக் குடுக்கைகள் தாங்கள் செய்யும் காரியம் எவ்வளவு பாரதூரமானதென்பதைக் கருதாமல், பொது மக்களுக்குக் கூப்பன் அரிசி கிடைக்கமுடியாதபடி செய்துவிட்டனர். பிரதமர் இல்லாத சமயத்தில் நிலைமையை மோசமாக்கக் கூடாதென்று அவர்கள் தீர்மானித்துள்ளதற்கு நேர்மாறாகக் காரியங்களைச் செய்து வருகின்றார்கள்.

கச்சேரிகள் முன்பாகத் தமிழரசுக் கட்சியின் சத்தியாக்கிரகம் நடைபெறும் வரை, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பங்கீட்டரிசி விநியோகம் செய்ய முடியாதென்கிறார் மந்திரிசபையின் தற்காலிகத் தலைவர் திரு. சி. பி. டி' சில்வா. சத்தியாக்கிரகம் செய்பவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கவேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு. அதை நிறைவேற்றாமல், பொதுமக்களுக்குக் கூப்பன் அரிசியை, சத்தியாக்கிரகம் நிற்கும் வரை கொடுக்க முடியாதென்பது, பெரிய குற்றமென்பதை இந்த அரசாங்கம் உணராமல் போனது துரதிருஷ்டவசமாகும்.

யாழ்ப்பாண மேயர் இவ்விஷயமாக விடுத்துள்ள வேண்டுகோளை, அவர் மறுத்து, நகரசபை மீதும் குற்றம் சுமத்துகின்றார். கூப்பன் அரிசி வேண்டுமானால், சத்தியாக்கிரகத்தை நிறுத்தும்படி தமிழரசுக்கட்சியைக் கேட்குமாறு திரு. சி. பி. டி' சில்வா கூறுகின்றார். அரசாங்கம் தனது அரசியல் எதிரிகளுக்கும் கூட எப்படியும் செய்ய வேண்டிய முக்கியமான கடமைகள் பலவுண்டு. உணவுப் பங்கீடு, மக்களின் அத்தியாவசிய தேவை. இந்த அடிப்படையான பொறுப்பை எக்காரணம் பற்றியும் அரசாங்கம் தட்டிக் கழிக்க முடியாது.

அரசாங்கக் கட்சிக் கூட்டத்திலும், பார்லிமெண்டிலும், வெளியிலும் நடந்துள்ள விவாதங்களையும் சில சம்பவங்களையும் பார்க்கையில், நிலைமை சற்றும் நம்பிக்கை அளிப்பதாக இல்லை. அரசாங்க ஊழியர்களான சில சிங்களச் சிப்பந்திகள், பார்லிமெண்டுக்கு ஊர்வலமாக வந்து, தற்காலிகத் தலைவரிடம், வகுப்புவாத மானகோரிக்கைகள் சிலகேட்டதற்கு, அவரும் உறுதி மொழி கொடுக்கின்றார். இவற்றையெல்லாம் கவனிக்கும் போது பிரதமர் திரும்பிய பின்பும் இந்த அரசாங்கம், இப்பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்க்க முடியுமா? என்ற சந்தேகம் ஏற்படுவதாகவுள்ளது. கட்சி முறையின்றி, எல்லாக் கட்சிகளும் வட்டமேசை மகாநாடு கூடி, இந்த முக்கிய அரசியல் பிரச்சினையை, பரந்தவுள்ளத்துடன் தீர்க்க, தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லாவிடில் நாட்டில் மீண்டும் வகுப்புவெறி தாண்டவமாடி பெரிய நாசங்கள் ஏற்பட்டுவிடக்கூடும்.

* * *

பத்திரிகை அச்சுக்குப் போகும் சமயத்தில், பங்கீட்டு அரிசியை வழங்க அரசாங்கம் ஒழுங்குசெய்துள்ளதாக கடைசிச் செய்திகிடைத்தது.

# மேற்கு ஜேர்மனியில் கூட்டாட்சிமுறை

## ஒரு சான்ஸலர் பத்து பிரதம மந்திரிகள்

**மேற்கு ஜேர்மனி: தலைநகரம் பான். பரப்பு 95 ஆயிரத்து 724 சதுர மைல். ஜனத்தொகை 5 கோடி 35 லட்சம். ஜேர்மன் சமஷ்டிக் குடி அரசு 1949-ம் ஆண்டு செப்டம்பர் 1-ம் திகதி அமுலுக்கு வந்தது.**

மேற்கு ஜேர்மனி 10 ராஜ்யங்களைக் கொண்டது. ஒவ்வொன்றுக்கும் தனித்தனி அரசியல் அமைப்பு. தனிப் பாராளுமன்றம், தனி அரசாங்கம் உண்டு. ஆனால் இவைகள் அனைத்தும் மேற்கு ஜேர்மன் மத்திய அரசாங்கத்துடன் ஒத்துழைத்துக் கூட்டாக நிர்வாகத்தை நடத்துகின்றன. கூட்டாட்சி முறை மேற்கு ஜேர்மனியில் நன்றாக வேரூன்றிவிட்டது.

மேற்கு ஜேர்மனியில் ஒரு கோடியிலிருந்து மற்றொரு கோடிக்கு குறுக்கே பிரயாணம் செய்பவர்கள் தாங்கள் பல இராச்சியங்களைக் கடந்து செல்வதை உணர்ந்திருக்க மாட்டார்கள். இந்த இராச்சியங்களின் பெயர்கள்: பேடன் உர்டெம்பர்க், பவேரியா, ப்ரெமன், ஹாம்பர்க், ஹெஸ்ஸி, கீழ் ஸாக்ஸனி, வடரைன், மேற்கு பாலியா, ரைன்லாந்து, பாலாடினேட், ஸார்லாந்து, ஸ்கெல்ஸ்விக் – ஹோல்ஸ்டீன். இந்த இராச்சியங்கள் ஒவ்வொன்றும் தனி ஆட்சிமுறை சுதந்திரத்தைக் கொண்டதாகும். 1949-ல் தயாரிக்கப்பட்ட ஜேர்மன் சமஷ்டிக் குடியரசு அரசியலமைப்புச் சட்டத்திலேயே இந்த இராச்சியங்கள் பூரண நிர்வாக சுதந்திரம் பெற்றிருக்கும் என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. ஒவ்வொரு இராச்சியத்திற்கும் தனி அரசியலமைப்பு, தனிப் பார்லிமெண்ட், தனி அரசாங்கம் ஆகியவை உண்டு. மேற்கு ஜேர்மன் சான்ஸலர் (வேந்தர்) திரு. அடினர் இந்த 10 இராச்சியங்களின் பிரதம மந்திரிகளுடன் கூட்டாக நிர்வாகத்தை நடத்தி வருகிறார்.

இந்த இராச்சியங்களின் முக்கிய வேலைத் திட்டங்கள் கல்வி, கலாச்சாரம் இவைகளைப் பரப்புவது, அமைதியை நிலைநாட்டல், சமஷ்டிச் சட்டங்களை எல்லாம் அமுல் செய்வது இவைகளேயாகும்.

### மத்திய அரசாங்கம்

பொது வருமானத்தில், சுயநிர்வாகத்தைத் திறம்பட நடத்தும் ஸ்தலஸ்தாபனங்களுக்கு, ஐந்தில் ஒரு பங்கும், சமஷ்டி இராச்சியங்களுக்கு, மூன்றில் ஒரு பங்கும் "பண்ட்" எனப்படும் மத்திய அரசாங்கத்திற்குப் பாதிக்குச் சிறிது குறைவாகவும், நிதி பங்கிடப்படுகிறது. போக்குவரத்து தபால்-தந்தி இம்மாதிரியான பொதுச் சேவைத் துறைகளில் மத்திய அரசாங்கத்தின் கீழ் வேலை செய்பவர்களின் எண்ணிக்கையைப் போல் நான்கு மடங்கு அதிகமாக ஸ்தலஸ்தாபனத் துறைகளிலும் எட்டு மடங்கு அதிகமாக இராச்சியங்கள் நடத்தும் துறையிலும் வேலைக்கமர்த்தப்பட்டு வருகின்றனர்.

சட்டமியற்றும் வேலையை மத்திய அரசினர் இராச்சிய அரசாங்கங்களுடன் பங்கிட்டுக் கொள்கிறது. சமஷ்டி ஜேர்மன் பார்லிமெண்டில் மேல் சபையான "பண்டஸ்ராட்" மூலம் இந்த வேலை நடைபெறுகிறது. கீழ்ச்சபை "பண்ட்ஸ்டாக்" நிறைவேற்றிய மசோதாக்கள் சட்டமாக மேல்சபை அங்கீகாரம் வேண்டும். சில மசோதாக்களை நிராகரிக்கும் ("வீட்டோ") அதிகாரமும் மேல்சபைக்கு உண்டு. இம்மாதிரி நிலைமை ஏற்பட்டால் அதனைத் தீர்ப்பதற்காகவென்றே ஒரு மத்தியஸ்த குழு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

### அதிக நன்மை

"பண்டஸ்டாக்"கில், 1949 முதற் கொண்டே கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சிக்கு 'மெஜாரிட்டி" இருந்து வருகிறது. ஆனால் ஸாக்ஸனி, ஹெஸ்ஸி, ஹம்பர்க், ப்ரெமன் ஆகிய இராச்சியங்களிலுள்ள "வான்டேஜ்" எனப்படும் பார்லிமெண்டில் சோஷலிஸ ஜனநாயகக் கட்சி "மெஜாரிட்டி" இருந்து வருகிறது. ஆகவே, இந்த இராச்சியங்களில் சோஷலிஸ அரசாங்கங்கள் இருந்து வருகின்றன. மேற்கு பெர்லினுக்கு அதன் விசேஷ முக்கியத்துவம் காரணமாக "பண்டஸ்ராட்"டில் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இதற்கு வாக்கு அளிக்

(6-ம் பக்கம் பார்க்க)

## ஐயாறன் எழுதுவது

"அன்ன விசாரம் அதுவே விசாரம். அது ஒழிந்தால் சொர்ண விசாரம் தொலையா விசாரம்" என்று ஒரு பெரியார் பாடினர்.

இப்போது நமக்கெல்லாம் அன்ன விசாரம். வடக்கிலும் கிழக்கிலுமுள்ளவருக்கு மட்டுமல்ல, மலைநாட்டிலுள்ள தமிழருக்கும்தான்.

மலைநாட்டிலுள்ள தமிழரில் சுமார் 8 லட்சம் பேர் "நாடற்றவர்" ஆக்கப்பட்டுள்ளனரல்லவா? அவர்களுக்கு இதுவரையில் கொடுத்து வந்த கூப்பன் அரிசியையும் இனிமேல் கொடுக்கக்கூடாதென்று உத்தரவு போட்டுவிட்டார்களாம்!

∴ ∴ ∴

யாழ்ப்பாணத்தில் சங்கக் கடைகளில் கூப்பன் அரிசிக்குப் பதிலாக நெல் கொடுப்பதாக அறிந்து அதுபற்றி விசாரித்தேன். கூப்பன் ஒன்றுக்கு 2 கொத்து நெல் (ஒரு கொத்து அரிசி கொடுப்பதாயும், ஒரு கொத்து நெல் 35 சதம் என்று விற்பதாயும் தெரிகிறது. அதாவது ஒரு கொத்து அரிசி 70 சதமாகிறது. அதிக விலை கொடுத்து நெல்லை வாங்க முடியாமல் மக்கள் தயங்குவதாயும் கேள்விப்பட்டேன்.

∴ ∴ ∴

தாளையடி முதலிய இடங்களில் இதுவரை கடையில் 80 சதம் விற்ற அரிசி இப்போது ஒரு ரூபாய் 10 சதமாம்! கூப்பன் அரிசி இல்லாததே இந்த விலை உயர்வுக்குக் காரணமென்று தெரிவிக்கிறார் நமது நிருபர்.

மட்டக்களப்பில் விட்டுவிட்டு மழை பெய்வதால் அறுவடைக்குப் பெரிய தடையாகவுள்ளதாயும், கூப்பன் அரிசியும் இல்லையென்றும், இதனால் கடைகளில் அரிசி விலை ஏறுவதாயும் மட்டக்களப்பு அன்பர் எழுதுகிறார்.

∴ ∴ ∴

கூப்பன் அரிசி கொடுக்காவிட்டால் வேலை நிறுத்தம் செய்வோமென்று பல தொழிற் சங்கங்கள் எச்சரிக்கை செய்துள்ளன.

மலைநாட்டிலே தோட்டப் பகுதிகளில், தேயிலைக் கொழுந்து கிள்ளி, ரப்பர்பால் எடுப்பவரில் பெரும்பாலோரும் "நாடற்றவர்." அவர்களுக்கும் கூப்பன் அரிசி இல்லாவிட்டால்......?

"பசிவந்திடப் பத்தும் பறக்கும்"என்று பாடினர் ஔவையார். ஆகவே, மக்கள் உண்ணும் உணவில் கைவைப்பது அரசாங்கத்துக்கே நல்லதல்ல

அன்பும் அஹிம்சையும் போதித்தார் கருணையே வடிவான புத்தர் பெருமான். அவர் உபதேசித்த தர்மத்தைப் பாதுகாப்பதாகக் கூறுபவர்கள், மக்களை எக்காரணம் பற்றியும் பட்டினி போடலாமா?

∴ ∴ ∴

சிதம்பரத்திலே நாவலர் பெருமான் பல தர்மங்களை ஏற்படுத்தி அவற்றை நடத்தி வைக்க சதாசிவம் என்பவரை நியமித்திருந்தார். அங்கு உணவுப் பஞ்சம் வந்துவிட்டது. நாவலர் தர்மத்துக்கான நிலங்களில் நல்ல விளைச்சல். அறுவடையான நெல்லை, வைத்திருந்து விற்றால் அதிக விலை கிடைக்குமென்றும், தர்மத்தை நன்றாகச் செய்யலாமென்றும் கூறி நாவலரின் உத்தரவைக் கேட்டிருந்தாராம் தர்மகர்த்தா.

"அதர்மத்திலிருந்து தர்மம் விருத்தியாகாது. இச்சமயம் சோறாகச் சிலருக்குக் கொடுப்பதை கஞ்சித்தொட்டிவைத்து பலருக்கு உடன் பசியாற்றவும்" என்று உத்தரவிட்டாராம் அந்தக் கருணை வள்ளல். அவர் பிறந்த இப்பொன்னாட்டில், இச்சமயம், மக்கள் பசி என்று வாடாமல், அன்னதானங்கள் ஊருக்கு ஊர், கோவிலுக்குக் கோவில் பெருகட்டும்!

∴ ∴ ∴

இதை எழுதி முடித்ததும் கொழும்பிலிருந்து ஒரு சந்தோஷமான டெலிபோன் செய்தி கிடைத்தது. பங்கீட்டு அரிசியைக் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறதாம். சபாஷ்!

### ஆசிரியருக்குக்கடிதம்

## சமரசப் பேச்சு

சமஷ்டிக் கட்சி "சமரசப் பேச்சை நடத்தத் தயாராக இருப்பதாயும், சிங்களமே நாட்டின் ஒரே ஆட்சி மொழி என்னும் அடிப்படையில், அது பேச்சு நடத்துமென்றும், திரு. எஸ். டி. பண்டாரநாயக்கா, அரசாங்கக் குழுவுக்கு அறிவித்திருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது.

இது உண்மையா? தமிழரசுக் கட்சித் தலைவர்கள் விளக்க வேண்டும்.

தமிழ்ப் பிரதேசங்களில் தமிழே ஆட்சி மொழியாக இருக்கவேண்டுமென்று தமிழரசுக் கட்சி கூறிவந்துள்ளது. அதை இப்போது மாற்றிவிட்டனரா? கட்சிகளும் தலைவர்களும் மாறலாம், ஆனால் தமிழ் மக்கள் இங்கு சந்ததிசந்ததியாகத் தன்மானத்துடன் வாழவேண்டியவர்கள்.

கட்சி, சாதி, மதம் முதலிய பேதமின்றி தமிழ் மக்கள் இப்போது மொழி உரிமைக்காகச் சத்தியாக்கிரகம் செய்கிறார்கள். ஆகவே சமரசத்துக்காக, தங்கள் அடிப்படைக்கொள்கைகளைத் தமிழரசுக் கட்சியினர் தளர்த்தமுடியாது.

மொழி உரிமைபற்றி தனிநாயக அடிகள் கூறியதை இங்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

"நம் ஈழவளநாட்டில் சிங்கள மொழியுடன் தமிழ் மொழியையும், அரசியல் மொழியாகவும் ஆட்சி மொழியாகவும் அமைக்காததுபோல் பெரிய கொடுங்கோன்மை, வரலாற்றிலேயே இல்லை என்று கருதுகிறேன்.

"தமிழ் மாவட்டங்களில் தமிழ் மக்களுக்குத் தமிழும் சிங்கள மக்களுக்குச் சிங்களமும்; சிங்கள மாவட்டங்களில் சிங்கள மக்களுக்குச் சிங்களமும், தமிழ் மக்களுக்குத் தமிழும் ஆட்சி மொழிகளாவதையே வேண்டுகிறோம்."

இந்த அடிப்படையிலேயே சமரசப் பேச்சுகளை நடத்த வேண்டும். இதனால்தான், வடக்கு, கிழக்கு மாகாணங்களைத் தவிர மற்றப் பகுதிகளில் வாழும் தமிழ் மக்களின் மொழி உரிமையையும், தன்மானத்தையும் காப்பாற்றி தமிழர் ஒற்றுமையை நிலைநாட்ட முடியும்.

உ. முருகவேள்

கோப்பாய்.

* * *

## நேரில் பாராது அறிக்கை வெளியிடாதீர்

இன்று வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நடைபெறும் சத்தியாக்கிரகம் தமிழ்பேசும் மக்களின் "தமிழ் மொழி" உரிமைப் போராட்டமே தவிர தமிழ் அரசுக்கட்சியின் தனிப் போராட்டமல்ல. சகல கட்சிகளும் இனத்தினரும் ஒருமித்து ஒரே குரலில் தமிழ் மொழிக்காக நடத்தும் அறப்போர் தான் இந்த இயக்கம் எனவே கண்ணால் காணாமல் தவறான கண்ணோட்டத்துடன் தவறான அறிக்கைகளை வெளியிடுவது முஸ்லிம்களைப் புண் படுத்துவதாகும். வடக்கு, கிழக்கு மாகாணங்களைத்தவிர மற்றைய மாகாணங்களில் வாழும் முஸ்லிம்களும் பேசுவது தமிழ்த்தான்.

எங்களுக்கு முஸ்லிம் பிரமுகர்கள் ஏதும் சொல்வதானால் எங்களின் நிலையை நேரில் கண்டறியாது கூறினால் முற்றி

(6-ம் பக்கம் பார்க்க)

# சமரசத் திட்டங்களை ஆபிரிக்க பிரதமர் நிராகரித்தார்

## லண்டன் மகாநாட்டில் தொடர்ந்து விவாதம்

லண்டன், மார்ச் 15

நேற்று நடைபெற்ற காமன்வெல்த் பிரதம மந்திரிகள் மகாநாட்டில் தென்னாபிரிக்காபற்றி எவ்வித முடிவும் செய்யப்படவில்லை என்றும், நேற்று நான்கு மணி நேரம் விவாதம் நடைபெற்றதென்றும் அறிவிக்கப்படுகிறது. தென்னாபிரிக்கா பற்றி இதுவரை மொத்தம் 12-மணி நேரம் விவாதம் நடைபெற்றிருக்கிறது. இன்று காலை மீண்டும் தொடர்ந்து விவாதிக்கப்படும்.

நேற்று பிரிட்டிஷ் பிரதமர் மாக்மில்லன் இரண்டு சமரசத் திட்டங்களைச் சமர்ப்பித்ததாயும், அதை தென்னாபிரிக்கப் பிரதமர் நிராகரித்து விட்டு தானே ஒரு திட்டத்தைச் சமர்ப்பித்ததாயும் கூறப்பட்டது. ஆனால் பிரதமர்கள் அனைவரும் அதை ஏற்காததால், மற்றோர் திட்டத்தை டாக்டர் வேர்வூட் சமர்ப்பித்தார். ஆயினும் சகல பிரதமர்களும் தென்னாபிரிக்காவின் போக்கை வன்மையாகக் கண்டித்தனர். தங்கள் நாட்டின் உள்விவகாரத்தில் தலையிடக்கூடாது என டாக்டர் வேர்வூட் பிடிவாதம் காட்டினார். இலங்கைப் பிரதமர் ஸ்ரீமதி பண்டாரநாயக்கா, பிரதமர் நேரு, கானா ஜனாதிபதி டாக்டர் நிக்ருமா, மலாயா பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான், கானடா பிரதமர் திரு. ஸ்டீபன் பேக்கர் ஆகியோர் இன ஒதுக்கலை வன்மையாகக் கண்டித்தனர்.

தென்னாபிரிக்கா காமன்வெல்த்தில் அனுமதிக்கப்பட்டால் தனது நாடு அதில் இருப்பதுபற்றி மறு பரிசீலனை செய்யவேண்டியிருக்கும் என டாக்டர் நிக்ருமா பிரதமர்களிடையே அறிவித்தார். தங்கனீகாவும், தென் ஆபிரிக்காவை விட்டுவைத்தால் தாங்கள் காமன்வெல்த்தில் சேரமாட்டோம் என தெரிவித்திருக்கிறது.

நேற்றைய கூட்டத்தில், சைபிரஸ் அங்கத்துவ நாடாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதை முன்னிட்டு அதன் தலைவர் ஆர்ச்பிஷப் மக்காரியோஸும் கலந்துகொண்டார்.

---

### சர்வதேச திரைப்பட விழா

புதுடில்லி, செவ்வாய்

இந்தியாவில் சர்வதேச திரைப்பட விழாவொன்றை நடத்த முடிவு செய்திருப்பதாகத் தகவல் இலாகா மந்திரி டாக்டர் கேஸ்கர் அறிவித்துள்ளார். புதுடில்லி, கல்கத்தா, சென்னை ஆகிய இடங்களில் இத்திரைப்படவிழா நடைபெறும் என்று அவர் தெரிவித்துள்ளார். இந்தத் திரைப்பட விழாவின் மூலம் இந்தியாவில் உற்பத்தியாகும் திரைப்படங்களின் தரத்தை ஒருவாறு அறிந்து கொள்ள முடியும் என்று கருதப்படுகிறது.

---

### குழந்தைகள் நோய் தடுப்பு மருந்து

புதுடில்லி, செவ்வாய்

கக்குவான், 'டிப்தீரியா போன்ற குழந்தைகளின் நோய்களைக் குணப்படுத்துவதற்கான ஒரு புதிய ஊசி மருந்து இந்தியாவில் விரைவில் தயாரிக்கப்படவிருக்கிறது என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

---

### அங்கோலா பற்றி இலங்கை பிரேரணை

நியூயோர்க், மார்ச் 15

அங்கோலாபற்றி ஆராய உப குழு ஒன்றை அமைக்க வேண்டுமென இலங்கை, லைபீரியா, ஐக்கிய அராபியக் குடியரசு ஆகிய மூன்று நாடுகளும் பாதுகாப்பு சபையில் பிரேரணை கொண்டுவந்திருக்கின்றன.

---

### முந்த்ரா அப்பீல் கோரிக்கை

அலகாபாத், மார்ச் 15

கம்பெனி மோசடி சம்பந்தமாய் தமது தண்டனையை எதிர்த்து, அலகாபாத் உயர் நீதிமன்றத்தில் திரு. முந்த்ரா செய்து கொண்ட அப்பீலை உயர் நீதிமன்றம் நிராகரித்தது.

---

### காங்கோ தூதுகோஷ்டி கோரிக்கை

நியூயோர்க், மார்ச் 15

காங்கோபற்றிய ஐ. நா. ஆலோசனைச் சபையில், தாங்களும் அங்கம் வகிக்க வேண்டுமென்று காங்கோ தூதுகோஷ்டி கோரியிருக்கிறது.

---

### தலைமையாசிரியர் கூட்டம்

தண்ணீரூற்று, திங்கள்

முல்லைத்தீவுப் பிரிவிலுள்ள 25 பாடசாலைகளின் தலைமையாசிரியர்களது கூட்டமொன்று முல்லைத்தீவு றோ. க. பாடசாலை மண்டபத்தில், வட்டார வித்தியாதரிசகர் திரு. முத்துலிங்கம் அவர்கள் தலைமையிற் கூடியது.

மாணவர் வரலாற்றுக்குறிப்புத் தயாரித்தல், பாடத்திட்டம், பாடப்பதிவு, பாடக்குறிப்பு, ஆசிரியர் லீவு விபரம், விளையாட்டுப்போட்டி முதலிய விடயங்கள் ஆராயப்பட்டன. மேற்குறிப்பிட்டவற்றில், எல்லாப் பாடசாலைகளும் ஒரே முறையைக் கையாளவேண்டுமென்று, வித்தியாதரிசகர் கேட்டுக்கொண்டார்.

---

### கேரள ஜனத் தொகை 1.68 கோடி

புதுடில்லி, மார்ச் 15

புதிய ஜனசங்கிப்படி கேரள ராஜ்யத்தின் ஜனத் தொகை 1,68,75,195. இதில் ஆண்களின் தொகை 83,45,897. படித்தவர்களின் விகிதாசாரம் 46.22.

---

### ரப்பருக்கு புதிய ஏற்றுமதி தீர்வை

கொழும்பு, புதன்

ரப்பர் ஏற்றுமதிக்குப் புதிய தீர்வை விதித்து நேற்று விசேஷ கெஜட் வெளியிடப்பட்டது. 100 ருத்தல் ஏற்றுமதிக்கு 30 ரூபாய் தீர்வை விதம் சகல ரக ரப்பருக்கும் தீர்வை விதிக்கப்பட்டிருக்கிறது.

---

### கிருமிநாசினி அருந்தி நால்வர் பலி

தெல்லிப்பளை, திங்கள்

வசாவிளானைச் சேர்ந்த திருமுருகன் இராமு (40) இராமு சின்னம்மா (30) இராமு கனகமணி (9) இராமு காந்தி ஆகியோர் பருத்தித்துறை ஓடக்கரையடியில் 11-ந்திகதி அதிகாலை ஐந்து மணியளவில் தேநீரில் கிருமி நாசினியைக் கலந்து அருந்தியமையால் ஸ்தலத்திலேயே மரணமடைந்தனர். கடன் தொல்லையால் தான் இந்த நிலைமை ஏற்பட்டதாக அறியப்படுகிறது.

### "தெய்வப்பிறவி"க்கு ராஷ்டிரபதி பதக்கம்

புதுடில்லி, மார்ச் 15

இந்தியாவின் 1960-ம் ஆண்டுக்கான சிறந்த படமாக "அநுராதர்" என்ற ஹிந்திப் படத்திற்கு ராஷ்டிரபதி தங்கப் பதக்கம் வழங்கப்பட்டது.

"தெய்வப் பிறவி" என்ற தமிழ்ப்படம் 3-வது ராஷ்டிரபதி பதக்கம் பெற்றது.

"பார்த்திபன் கனவு" என்ற படத்திற்குப் பிரதேசப் பதக்கம் கிடைத்துள்ளது.

### நார்வேயில் இந்திய விஞ்ஞானி

இந்திய அணுசக்தி விஞ்ஞானி ராஜராமன்னு, நார்வேயும்—சர்வதேச அணுசக்தி கமிஷனும் கூட்டாக நிறுவியுள்ள "நோரா" அணுசக்தி நிலையத்துக்கு தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

---

புதுடில்லி, மார்ச் 15

காங்கோவுக்கான பாரதப் போர்த்துருப்புக்களின் இரண்டாவது அணி இன்று புதுடில்லியிலிருந்து புறப்பட்டது. நேற்று முதல் தொகுதியில் 280 பேர் சென்றனர்.

# கச்சேரியிலிருந்து தொண்டர்கள் வாபஸ்இன்றேல்பங்கீட்டரிசிஇல்லை'

—ஸி. பி. டி' சில்வா

## பிரதமர் திரும்பும்வரை மொழிப்பிரச்னையை விட்டுவைக்க பார்லிமெண்டரி கட்சி முடிவு

கொழும்பு, புதன்

**வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஏற்பட்டுள்ள நிலைமைபற்றி ஆராயுமுகமாக நேற்றுக் கூடிய அரசாங்கப் பாராளுமன்றக் கட்சியில், நிலைமை மேலும் மோசமாகக் கூடிய நடவடிக்கைகளைக் கைக்கொள்ளாமல் இருப்பதென்றும், லண்டனிலிருந்து பிரதமர் ஸ்ரீமதி பண்டாரநாயக்கா திரும்பிவரும்வரை மொழிப் பிரச்சினையை விட்டுவைப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.**

தற்காலிக மந்திரிசபைத் தலைவர் திரு. ஸி. பி. டி சில்வா வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிலவும் நிலைமை பற்றி பார்லிமெண்ட் கூட்டத்தில் ஒரு அறிக்கை விடுத்தார். "யாழ்ப்பாணத்தில் கடந்த 3 வாரங்களாக கச்சேரி, கல்விக் காரியாலயம், இதர அரசாங்கக் காரியாலயங்கள் ஆகியவற்றில் தமிழரசுக்கட்சியினர் நடத்திவரும் சத்தியாக்கிரகம் காரணமாய் வேலைகளில் பெருமளவு தடை ஏற்பட்டிருக்கிறது" என அவர் கூறினார்.

திரு. சில்வா மேலும் கூறியதாவது:-

"யாழ்ப்பாணத்தில் ஊர்வலங்களும், பொதுக் கூட்டங்களும் நடைபெற்றுவருகின்றன. இந்த நிகழ்ச்சிகளில் அரசாங்க ஊழியர்களும், இளைஞர்களும் பிரதானமாகப் பங்குபற்றிவருகிறார்கள். மட்டக்களப்பில் கச்சேரிக்கு முன்பும், மற்றும் பல அரசாங்கக் காரியாலயங்களிலும் ஆண்களும், பெண்களும், சிறுவர்களும் சத்தியாக்கிரகம் செய்துவருகிறார்கள்.

திருக்கோணமலையில் கச்சேரியைத் தவிர இதர இடங்களில் வேலைகள் நடைபெற்றுவருகின்றன. வருகிற 20-ம் தேதி மன்னாரிலும் சத்தியாக்கிரகம் செய்யப்போவதாய்த் தமிழரசுக்கட்சி அறிவித்துள்ளது. தமிழரசுக் கட்சியினரின் சத்தியாக்கிரகத்தைச் சமாதான இயக்கமாகக் கொள்ள முடியாது. அத்துடன் தமிழரசுக்கட்சி தன் ஆதிக்கத்தை இழந்துவருகிறது. மாணவர்கள் சத்தியாக்கிரகத்தில் கலந்துகொள்ளக்கூடாது என்ற தமிழரசுக் கட்சித் தலைவரின் வேண்டுகோளைப் புறக்கணித்து, மாணவர்கள் தொடர்ந்து இந்த இயக்கத்தில் கலந்துகொள்கிறார்கள். தமிழரசுக் கட்சியினரின் சத்தியாக்கிரகம் சமாதான இயக்கமல்ல. பயங்கரத்தன்மையாய்ந்தது. அரசாங்கத்தின் வருமானத்தைத் தடை செய்ய அவர்கள் முயல்கிறார்கள். சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொண்டது. சட்டம், ஒழுங்கு, அத்தியாவசியசேவை ஆகியவற்றைத் தொடர்ந்து நிலைநாட்டவும் அது தொடர்ந்து முயற்சி செய்யும்.

ஏற்கனவே கச்சேரிக்கு முன் சத்தியாக்கிரகம் மேற்கொண்டிருப்பவர்களை தமிழரசுக் கட்சி வெளியேற்றினாலன்றி, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பங்கீட்டரிசியும், இதர உணவுப் பொருள்களும் வழங்குவது சாத்தியமில்லை."

### மகா ராணி விருந்தில் இலங்கைப் பிரதமர்

லண்டன், மார்ச் 15

இன்றுமாலை பிரிட்டிஷ் மகாராணியார் காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாட்டில் அளிக்கும் விருந்தில் ஸ்ரீமதி பண்டாரநாயக்காவும் இதர பிரதமர்களும் கலந்துகொள்வார்கள்.

---

புதுடில்லி, மார்ச் 15

இந்தியாவுக்கு ஹெலிக்கொப்டர் விமானங்கள் வாங்கும் விஷயம் பற்றி ரஷ்யாவுடன் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றுவருவதாய்ப் பாதுகாப்பு மந்திரி திரு. வி.கிருஷ்ண மேனன் அறிவித்தார்.

'ஹென்றலி'
உடை அலங்காரத்தின்
உன்னத அடையாளமாகும்

ஹென்றலி

★ சேட் ★ ஷோட்
★ காற்சட்டை ★

ஹென்றலி சேட், ஷோட்ஸ், காற்சட்டை ஆகியவற்றை அணியும் ஆடவரும், இளைஞரும் சௌகரியத்தை அநுபவிப்பதுடன் வசீகரமான தோற்றத்தையும் பெற்று அழகுடன் விளங்குகின்றனர்.

ஹென்றலி உடைவகையில்
நீங்கள் எதைத் தெரிந்தெடுத்து வாங்கினாலும்,
அது கொடுத்த பணத்திற்கு நிறைந்த பெறுமதியாகும்.

ஹென்றலி (காமெண்ட்ஸ்) லிமிட்டெட்,
பழைய விமான நிலைய வீதி,
(Old Air Port Road)
இரத்மலானை

யாழ்ப்பாணப் பகுதிகளுக்கு ஏக விநியோகஸ்தர்கள்:
ஆதம்பாய் ஸ்ரோஸ்
16, பெரியகடை,
யாழ்ப்பாணம்

## வரி விளம்பரம்

### உங்கள் நோய்

குணப்படுத்த உத்தர வாதம். நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 10-50. இவை பற்றிய கற்றலோக் (Catalogue) இனம்.

**வைத்தியர் பரிபூரணநந்தர்,**
கைலாசபிள்ளையார் கோவிலடி,
யாழ்ப்பாணம்,
Advt. 58

### தேவை

ஸ்ரீ கணேஸ் இன்டஸ்ரீஸில் வேலை செய்வதற்கு வேலையாட்கள் தேவை. 15 வயது முதல் 20 வயது வரை வேலை விபரம் சாந்துப் பொட்டு, பற்பொடி, பவுடர்பாக்கெற்ஸ் இவை போன்ற வேலைகள் செய்தல். விபரங்கட்கு நற்சாட்சிப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும்:

**ஸ்ரீ கணேஸ் இன்டஸ்ரீஸ்,**
துன்னாலை வடக்கு,
கரவெட்டி.
Advt 59

### தேவை

வவனியா வட்டாரத்தைச் சேர்ந்த கனகராயன்குளத்தில் கொழும்பு ரோட் அருகாமையில் நெல்லுச்சங்கத்துக்கும், தபாற்கந்தோருக்கும் பின்னால் இருக்கும் கட்டிடத்தில் 7-ம் நம். கல்லருக்குரிய கோட்டாவுடனுள்ள மிசினையும் எடுத்து தற்போதுள்ள வசதிகளுடன் இன்னும் வெளி வியாபாரத்துக்கு இச்சுற்றுடலிலுள்ள படங்கு அடி நெல்லை கொள்வனவு செய்து மாதம் 3000 புசல் அரிசி விநியோகம் செய்யக்கூடியதாக இரண்டாவது மிசினைப்போட்டு ஸ்தாபனம் முழுவதையும் நிர்வாகிக்கக் கூடிய பணவசதியுள்ள பங்காளியோ அல்லது குத்தகைக்கு எடுக்கக்கூடியவரோ தேவை. இந்த ஸ்தாபனத்திலுள்ள பலநோக்குக் கடையையும் சேர்த்து நடத்தக்கூடியவர் விரும்பத்தக்கது. விண்ணப்பங்கள் 31-3-61க்குள் கீழ்க்கண்ட விலாசத்துக்கு அனுப்பவும். பெட்டி எண் 18, C/o ஈழநாடு, தபாற்பெட்டி எண் 49, யாழ்ப்பாணம். Advt. 60

## வவனியா தமிழ் ஆசிரியர் சங்க அங்குரார்ப்பணம்

வவனியா, திங்கள்

வவனியாச் சைவப்பிரகாச வித்தியாசாலையில் ஆசிரியர் சங்க வவுனியாக் கிளைக் கூட்டம் தற்காலிய தலைவர் திரு. வி. சுப்பிரமணியம் தலைமையில் கூடிற்று. வவுனியா வட்டாரத்தில் உள்ள வித்தியாதிபதியின் முகாமையின் கீழ் இயங்கும் சகல பாடசாலை ஆசிரியர்களும் சமூகமளித்திருந்தனர்.

உத்தியோகத்தர் தெரிவில் கீழ்க்கண்டோர் ஏகமனதாக சபையோரால் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: திரு. வி. சுப்பிரமணியம், உபதலைவர்: திரு. வை. கணபதிப்பிள்ளை, காரியதரிசி: திரு. க. பேரம்பலம், உபகாரியதரிசி: திரு. அ. தம்பிராசா, தனாதிகாரியாக: திரு. க. உமா மகேஸ்வரன், நிர்வாகசபை உறுப்பினராக: திரு. பே. கீதபொன்கலன், ஆ. தம்பு, த. யோகநாதன், திருமதி இராசரத்தினம், ப. லோறன்ஸ், திருமதி தி. அவுற்ஸ்கூன்.

# சத்தியாக்கிரக செய்திகள்

கல்லடி உப்போடை நொச்சிமுனை மகளிர் முன்னணி தலைவி திருமதி தெ. தங்கத்துரை பணமுடிப்பொன்றை மட்டக்களப்பு முதலாம் பிரதிநிதி திரு. செ. இராசதுரையிடம் ஒப்படைத்தார்.

⁂ ⁂ ⁂

புங்குடுதீவுக் கிராமச் சங்கம் சத்தியாக்கிரக நிதி ஒன்று திரட்டி 18-3-61 சனிக்கிழமை காலை பண்ணைத் தாம்போதியிலிருந்து ஊர்வலமாகப் புறப்பட்டுக் கச்சேரியை அடைந்து சத்தியாக்கிரகம் செய்து நிதியை தமிழ்த் தலைவரிடம் ஒப்படைப்பதென்று தீர்மானிக்கப்பட்டது.

⁂ ⁂ ⁂

நிந்தாவூர் தொகுதியில் பெரிய தமிழ் கிராமமான காரைதீவில் ஆயிரத்துக்கு மேற்பட்ட ஆண்களையும் பெண்களையும் டாக்டர் எஸ். பரசுராமன் தொண்டர்களாக திரட்டியுள்ளார்.

⁂ ⁂ ⁂

புளியங்குளம் கிராமக் கோட்டு வாசலில் 9 பெண்கள் உட்பட 86 தொண்டர்கள் சிங்களம் மட்டும் சட்டத்தை எதிர்க்கும் முகமாகச் சத்தியாக்கிரகஞ் செய்தனர்.

⁂ ⁂ ⁂

நிந்தாவூர், அட்டாளைச் சேனை, அக்கரைப்பற்று, பாலமுனை, என்னும் முஸ்லிம்கள் வாழும் கிராமங்களிலிருந்து தற்பொழுது ஆயிரத்துக்கு மேற்பட்டோர் தொண்டர்களாகச் சேர்ந்துள்ளார்கள்.

⁂ ⁂ ⁂

நிந்தாவூர் எம். பி. ஜனாப் எம். ஐ. எம். அப்துல் மஜீத் தனது தொகுதியைச் சேர்ந்த அக்கரைப்பற்று, அட்டாளைச் சேனை, பாலமுனை, நிந்தாவூர், காரைதீவு ஆகிய கிராமங்களிலிருந்து, ஆயிரக்கணக்கில் தொண்டர்களைத் திரட்டிக் கொண்டிருக்கிறார்.

⁂ ⁂ ⁂

தீவுப்பகுதி மக்கள் எதிர் வரும் சனிக்கிழமை திரு. வே. அ. கந்தையா தலைமையில் மறியல் செய்வர் என்றும் இம் முறை அதிகம் பெண்கள் கலந்துகொள்வர் என்றும் எல்லாமாக தீவுப் பகுதியில் 5000 பேருக்கு மேல் கலந்துகொள்வர் என்றும் கூறப்படுகிறது.

⁂ ⁂ ⁂

ஊர்காவற்றுறை தீவுப் பகுதி ஐக்கிய மோட்டார் வள்ளச் சங்கத்தினர் அண்மையில் கூடி மறியல் இயக்கத்தினருக்கு தங்கள் சம்பளத்தில் ஒரு நாள் சம்பளத்தை கொடுப்பது என்று தீர்மானித்துள்ளனர்.

⁂ ⁂ ⁂

வட்டுக்கோட்டைத் தொகுதியைச் சேர்ந்த காரைநகர் மக்கள் வருகிற 16-3-61-ல் ஓர் ஊர்வலமும் சத்தியாக்கிரகமும் செய்ய ஆயத்தம் செய்து வருகின்றார்கள். கிளைக் கட்சி சேகரித்த ரூ. 1092 எஸ். ஜே. வி. செல்வநாயகத்திடம் ஒப்புவிக்கப்படும்.

⁂ ⁂ ⁂

கல்குடாவில் வசிக்கும் நாற்பது வயது நிரம்பியவரும் கண்பார்வை அற்றவருமான வயிரன் தம்பிமுத்து என்பவர் இன்று கல்குடாவிலிருந்து புறப்பட்ட தொண்டர்களுடன் தானும் ஒரு தொண்டராகக் கலந்துகொண்டு மட்டக்களப்பு கச்சேரியை மறியல் செய்வதற்காகச் சென்றுள்ளார்.

---

## விசேஷ ஆராதனை

மாவிட்டபுரம், செவ்வாய்

தமிழ் உரிமைப் போராட்டத்திற்காக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நடக்கும் சாத்வீக சத்தியாக்கிரகம் வெற்றி பெறவும், சிங்களச் சகோதரர்களுடன் ஒற்றுமையுடன் வாழவும் திருவருள்புரிய வேண்டுமென்று இன்று பன்னாலை சிவபூதநாயர் கோவிலில் விசேட அபிஷேக ஆராதனைகளும், பிரார்த்தனைகளும் நடைபெற்றன. இதனைத் தொடர்ந்து ஊர்ப் பொது மக்களால் அன்னதானம் வழங்கப்பட்டது.

தமிழ் மக்களின் உரிமைகள் கிடைக்க வேண்டும் என்பதற்காக உரும்பராய் சிதம்பரசுப்பிரமணியசுவாமி கோவிலில் அபிஷேக ஆராதனை நடைபெற்று வருகின்றன.

வரும் புதன் கிழமை இது குறித்து சங்காபிஷேகமும் மகேஸ்வர பூசையும் அன்னதானமும் நடாத்த ஆலயதர்ம பரிபாலன சபையினர் ஆயத்தங்களைச் செய்து வருகின்றனர்.

## ஆசிரியர் சங்கத்தின் தீர்மானம்

மாவிட்டபுரம், புதன்

மல்லாகம் ஆங்கில வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்ற வலி- வடக்கு ஆசிரியர் சங்கக் கூட்டத்தில் பின் வரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. " இன்று வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நடைபெறும் தமிழ் உரிமைப் போராட்டம் கட்சிச் சார்பற்றதும், சமயப் பற்றற்றதுமாகும். எனவே இப் போராட்டத்திற்கு வடமாகாண ஆசிரியர் சங்கம் தனது பெருமாதரவைக் காட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.

---

## தீவுப்பகுதித்தொண்டர்கள்

ஊர்காவற்றுறை, செவ்வாய்

எதிர்வரும் சனிக்கிழமையன்று தீவுப்பகுதித் தொண்டர்கள் சத்தியாக்கிரகத்தில் மூன்றாவது தடவையாகக் கலந்து கொள்வார்கள். ஊர்வலங்கள் நடத்தவும் முயற்சிகள் நடைபெறுகின்றன. போராட்டத்திற்கு நிதி உதவியளிக்கவும் ஏற்பாடாகி வருகிறது.

---

## உலக குத்துச்சண்டை சாம்பியன்

புளோரிடா, மார்ச் 14

உலக கனரக குத்துச் சண்டை சாம்பியன்ஷிப்புக்காக நேற்று மியாமி பீச்சில் நடைபெற்ற போட்டியில் பிளாய்ட்பெட்டர்ஸன், சுவீடனைச் சேர்ந்த ஜொகான்ஸனை மீண்டும் தோற்கடித்து சாம்பியன் பட்டத்தைக் காத்துக் கொண்டார்.

# " சகல முஸ்லிம்களும் கலந்து கொள்ள வேண்டும்"

## முஸ்லிம் பெரியார் கருத்து

யாழ்ப்பாணம், புதன்

"இலங்கைவாழ் முஸ்லிம் மக்களின் தாய்மொழி தமிழ் மொழிதான். தமிழ் மொழிக்கு உரிமைபெறுவதற்காக நடைபெறும் இன்றைய போராட்டத்தில் வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த முஸ்லிம் மக்கள்மட்டும் கலந்து கொண்டால் போதாது. இலங்கையிலுள்ள சகல முஸ்லிம் மக்களும் கலந்துகொள்ளவேண்டும்."

இவ்வாறு அன்ஸார் சுன்னத்துல் முஹம்மதியா சங்க ஸ்தாபகரும் மதுரஸாதாருத் தௌஹமீது அதிபருமான அல்லாமா அல்ஹாஜ் அத்துல் ஹமீது அல்பக்ரி நேற்றுத் தெரிவித்தார்.

மட்டக்களப்பு திருக்கோணமலை ஆகிய இடங்களுக்குச் சென்று சுற்றிப்பார்த்துவிட்டு யாழ்ப்பாணத்தில் சத்தியாக்கிரக இயக்கத்தைப் பார்வையிட வந்திருந்த அல்லாமா அல்ஹாஜ் அப்துல் ஹமீது அல்பக்ரி இனி இலங்கையின் இதர இடங்களுக்கும் சென்று முஸ்லிம் மக்கள் இப்போராட்டத்துக்கு ஆதரவளிக்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப் போவதாகத் தெரிவித்தார். இவர் ஹாஜி-வி.எம். அபூஸாலியுடன் சத்தியாக்கிரகம் நடைபெற்ற இடங்களுக்குச் சென்று பார்வையிட்டார்.

---

## வர்த்தக ஊழியர்களும் கலந்து கொள்வர்

யாழ்ப்பாணம், புதன்

சத்தியாக்கிரக போராட்டத்தில் கலந்துகொள்வதற்கான ஆயத்தங்களை வர்த்தக ஊழியர் செய்துவருகிறார்கள்.

இவர்கள் வரும் சனிக்கிழமை மாலை 2 மணிக்கு யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திலிருந்து கச்சேரிக்கு ஊர்வலமாகச் செல்வார்கள். அங்கு திரு. எஸ். ஜே. வி. யிடம் பணமுடிப்பொன்றை [illegible] ார்களென அறி


# தண்ணீர் விநியோகத்திற்கு "அல்கத்தீன்" பைப்



பி. எஸ். எஸ். 1372: 1953

தேய்வை எதிர்க்க வல்லது
செதில்களாகப் பெயராது
நிறுவுவது எளிது

500 அடி வரை நீளமுள்ள துண்டுகள் கிடைக்கின்றன.

பிரிட்டிஷ் திட்ட அளவுப் பிரகாரம் இப்பொழுது இலங்கையில் உற்பத்தி யாக்கப்படுகின்றது.

"அல்கத்தீன்" பைப் கீழ்கண்ட வியாபார ஸ்தாபனங்களில் கிடைக்கிறது:

● [illegible] அண்ட் கிரைக் லிமிடெட்டும் கிளை ஸ்தாபனங்களும். ● ப்ரௌன் அண்ட் கோ. லிமிடெட்டும் கிளை ஸ்தாபனங்களும். ● கார்டோஸா ஸ்டோர்ஸ், நுவரலியா. ● [illegible] அண்ட் கம்பெனி, பண்டாரவளை. ● பண்டாரவளை பாரேஜ் ஸ்டோர்ஸ், பண்டாரவளை. ● கண்ணன் [illegible], 119, பிரின்ஸ் ஸ்றீட், புறக்கோட்டை. ● எ. வி. எச். [illegible] ● நேஷனல் ட்ரேடிங் கோப்பரேஷன், கண்டி. ● பக்கீர் சாய்பு அண்ட் சன்ஸ், பதுளை. ● எஸ்டேட் சப்ளைஸ், கண்டி. ● சாமுவேல் அண்ட் சன்ஸும் கிளை ஸ்தாபனங்களும். ● சென். அன்தோனி ஹட்வெயார் ஸ்டோர்ஸும் கிளை ஸ்தாபனங்களும். ● உப்பாலி ஸ்டோர்ஸ், மாத்தளை. ● டப்ளிவ். எம். சலி, காலி.

ICI

"அல்கத்தீன்" ஐ.ஸி.ஐ. பொலித்தீனுக்கு அளிக்கும் வியாபாரப்பெயர்.

**இம்பீரியல் கெமிக்கல் இண்டஸ்ட்ரீஸ் (எக்ஸ்போர்ட்) லிமிடெட்**
(இம்பீரியல் கெமிக்கல் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்டின் துணைக் கம்பெனி, இங்கிலாந்தில் இணைக்கப்பெற்றது. அங்கத்தவரின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது.)
**தபாற் பெட்டி 352, கொழும்பு.**

# பங்கீட்டு அரிசி வழங்காததற்கு கண்டனம்

கொழும்பு, புதன்

யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலும் பங்கீட்டரிசி வழங்கப்படாததற்கும் வடக்கு, கிழக்கு மாணங்களில் பொலிசார் நடந்துகொண்ட முறைக்கும் ஆட்சேபம் தெரிவிப்பதென்று யு. என். பி. பார்லிமெண்டரிக் குழு தீர்மானித்தது. பங்கீட்டரிசி வழங்காததை பலர் கண்டித்துப் பேசினராம்.

யு. என். பி. பார்லிமெண்டரிக் குழுவின் கூட்டம் நேற்றுக் காலை நடைபெற்றது. ஜனாப் எம். எச். நயினுமரைக்கார், திரு. ரி. குயின்டன் பெர்ணண்டோ, திரு. லி. மத்தியூ ஆகியோரைக்கொண்ட குழு வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சுற்றுப்பிரயாணம்செய்துவிட்டுச் சமர்ப்பித்த அறிக்கையையும் குழு விவாதித்தது.

நேற்று நடைபெற்ற அரசாங்கக்கட்சியின் கூட்டத்தில் தமிழரசுக்கட்சியின் சத்தியாக்கிரக இயக்கம்பற்றியும் மொழிப் பிரச்னைபற்றியும் கட்சிஅங்கத்தவர் எவரும் அபிப்பிராயம் வெளியிடக்கூடாதெனத் தீர்மானிக்கப்பட்டது.

## காரைநகர் மக்கள் ஊர்வலம்

காரைநகர், செவ்வாய்

வியாழக்கிழமை காரைநகர் மக்கள் பிரமாண்டமானதோர் ஊர்வலம் நடத்த ஏற்பாடுகள் செய்துள்ளனர். கட்சி பேதமற்ற முறையில் ஊர்வலத்தில் கலந்து கொள்ளுமாறு பொது மக்களை ஊர்வலத்துக்கு ஏற்பாடுகள் செய்யும் பிரமுகர்கள் கேட்டுள்ளனர்.

## இராணுவத்தை வாபஸ் பெறுக

மட்டக்களப்பு, புதன்

"பாரபட்சமான முறையில் முரட்டுத்தனமாக அரசாங்கம் தனிச்சிங்கள சட்டத்தை வடக்குகிழக்குமாகாணங்களில் புகுத்த முற்பட்டதினுல்தான் சத்தியாக்கிரகஇயக்கம் உருவாகியது.

இராணுவத்தினரையும், கடற்படையினரையும் ஏராளமாக அனுப்பி மக்களைப் பயமுறுத்தி அடக்குமுறை நடவடிக்கைகள் எடுத்தோ அல்லது சாதாரண ஏழைமக்களுக்குபங்கீட்டுஅரிசியைமறுப்பதினுலோ அரசாங்க ஊழியர்களை இடம் மாற்றி வஞ்சம் தீர்ப்பதினுலோ இந்தச் சத்தியாக்கிரக இயக்கத்தை முறியடித்துவிடலாம் என்று அரசாங்கத்திலுள்ள சிலர் நினைத்தால் அது வெறும் பகற்கனவேயாகும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலிருந்து இராணுவத்தினரை உடனடியாக வாபஸ் செய்துவிட்டு, பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்குமாறுஅரசாங்கத்தை கேட்டுக்கொள்கிறேம். இந்த ஒரே வழியில்தான் இன்றுள்ள சிக்கலான நிலைமையை மாற்றி நாட்டின் இரு இனங்களுக்குமிடையே ஒற்றுமைக்கான சூழ்நிலைகளை உருவாக்கி நமக்குள்ள இதர முக்கியமான பிரச்சினைகளில் கவனம் செலுத்தமுடியும்." என மட்டக்களப்பு கம்யூனிஸ்ட் கட்சிக். கிளைத்தலைவர் திரு. கே. விகிருஷ்ணகுட்டி கூறியிருக்கிறர்.

## முஸ்லிம்களும் சத்தியாக்கிரகமும்

காரைதீவு, செவ்வாய்

"கடந்த சில நாட்களாக இலங்கை வானெலியைக் கட்சிப் பிரசாரத்துக்காக உபயோகப்படுத்துவது கண்டிக்க வேண்டிய விஷயமாகும். வடகீழ் மாகாணங்களில் வதிகின்ற தமிழர், முஸ்லிம்களின் ஒற்றுமையைச் சிலர் சிதைக்கப் பார்க்கின்றனர். முஸ்லிம்கள் பேசுவது தமிழ்மொழியே; அம்மொழிக்காக முஸ்லிம்கள் போராட்டத்தில் குதித்திருப்பது வரவேற்கத்தக்கதாகும். இதை எந்த ஒரு சக்தியாலும் தடுக்கமுடியாது" என்றுமட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பிரபல முஸ்லிம் பிரமுகரும், முன்னைநாள் நிந்தவூர் கிராமச் சங்கத் தலைவருமான ஹாஜி. எம். மேர்ஸா பத்திரிகைக்கு விடுத்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். அவ்வறிக்கை மேலும் கூறுவதாவது:-

"சோனகர்களின் ஆயுட்காலத்தலைவர் எனக் கூறிக்கொள்ளப்படும் சர். ராசிக் பரீத் வானெலி மூலமாக முஸ்லிம்களை சத்தியாக்கிரகத்தில் கலந்து கொள்ளவேண்டாமென்று பிரச்சாரம் செய்கிறர். அவ்வானெலியில் முஸ்லிம்களை பங்கு பற்றவேண்டாமென்று சொல்வதற்கு உரிமையிருப்பது போல, இயக்கத்தில் கலந்து கொள்ள வேண்டுமென்று வானெலிப் பிரச்சாரம் செய்ய ஏனையகட்சித்தலைவர்களுக்கும் உரிமையுண்டு என்பதை அரசாங்கம் உணர்ந்து கொள்ள வேண்டும். அதுதான் ஜனநாயக முறையுமாகும். முஸ்லிம்களாகிய நாம் மொழிப்போராட்டத்தில் குதித்தே தீருவோம்"

# மட்டக்களப்பில் வேடுவர் சத்தியாக்கிரகம்

வாழைச்சேனை, புதன்

வாழைச் சேனையிலிருந்து பத்துமைல்களுக்கு அப்பால் உள்ளதும், யானைகளும், கரடிகளும் வாசம் செய்யும் காடுகளையண்டியுள்ளதுமான முறுத்தானை, கோங்குழை ஆகிய கிராமங்களிலிருந்து 'வேடுவகுல'ப் பெருமக்கள் கால்நடையாக வாழைச்சேனையை அடைந்து இங்கிருந்து லொறிகள்மூலம் மட்டக்களப்புக்கு சத்தியாக்கிரகம் செய்வதற்காகச் சென்றுள்ளனர். ஜி. திஸாநாயக்கா, எஸ். பி. அமரசிங்க ஆகிய சிங்கள அன்பர்களின் தலைமையில் கறுவாக்கேணியிலிருந்து சுமார் நூறு ஆண், பெண் தொண்டர்கள் மட்டக்களப்புச் சத்தியாக்கிரகத்தில் பங்கு பற்றுவதற்காகச் சென்றனர்.

சுமார் அறுநூறு சைக்கிள்களின் ஊர்வலமும் மட்டக்களப்புக்குச் சென்றுள்ளது. இன்று கல்குடா தொகுதி மக்கள் மறியல் செய்கிறர்கள்.

## இன்றைய ஊர்வலம்

கட்சிப்பேதமற்ற ஊர்வலம் ஒன்று வியாழக்கிழமை காலை 7 மணிக்கு சித்தங்கேணிச்சந்தியிலிருந்து ஆரம்பமாகும். அன்றைய தினம் வட்டுக்கோட்டைத் தொகுதியிலுள்ள கடைகள் யாவற்றையும் மூடுவதற்கு ஏற்ற ஒழுங்குகளை வட்டுக்கோட்டைக்கிராமச்சங்கம் கவனித்து வருகின்றது. வட்டுக்கோட்டைத் தொகுதி எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் தலைமையில் வட்டுக்கோட்டைத் தொண்டர்கள் கச்சேரி முன் சத்தியாக்கிரகம்செய்வார்கள்.

## ரஸாயன சங்கம் கட்டுரை போட்டி

கொழும்பு, புதன்

இலங்கை ரஸாயன சங்கம் இவ்வாண்டு கட்டுரைப் போட்டியொன்றை நடத்திருக்கிறது. போட்டியின் விபரங்கள் தலைமையாசிரியர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

ஆங்கிலம், சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் இப்போட்டிக்குக் கட்டுரைகளை எழுதலாம். சென்ற ஆண்டு இப்போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியைச் சேர்ந்த மாணவர் ஸ்ரீஸ்கந்தராசா முதற் பரிசு பெற்றுர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஹரிமன் இந்தியா விஜயம்

புதுடில்லி, மார்ச் 15

அமெரிக்க ஜனதிபதி கெனடியின் விசேஷத்தூதரான திரு. அவரல் ஹரிமன் இன்று காலை புதுடில்லி வந்திருக்கிறர். இந்தியத் தலைவர்களுடன் அவர் பேச்சுவார்த்தை நடத்துவார்

## பெல்ஜியம் முறையீடு

நியூயோர்க், மார்ச் 15

காங்கோவிலுள்ள அந்நிய நாட்டினரை ஐ. நா. பாதுகாக்கவில்லை என்றும், சுமார் 2000 ஐரோப்பியர்கள் கீவுமாணத்தில் அருகிலுள்ள ருவண்டா—உருண்டிக்கு ஓடிவந்திருப்பதாயும் பெல்ஜியப் பிரதிநிதி ஐ. நா. விடம் முறையிட்டார்.


இன்பகரமான 2-வது வாரம்! பார்த்துப் பயன் அடைய வேண்டிய பண்பு நிறைந்த படம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு) வெம்பிளி (கண்டி)

ஸ்ரீ கிருஷ்ண (திருக்கோணமலை) விஜிதா (மஸ்கேலியா) மொடர்ன் (பதுளை)

நடிகர்கள்: என். டி. ராமராவ், வி. நாகையா, டி. எஸ். பாலையா, பீ. எஸ். வீரப்பா, டி. ஆர். ராமச்சந்திரன், ஓ. ஏ. கே. தேவர், ராஜநலா



நடிகைகள்: சௌகார் ஜானகி, பி. கண்ணும்பா, கிரிஜா, மோகன, குசலகுமாரி, விஜயலட்சுமி, எஸ். வரலட்சுமி

டைரக்ஷன்: கே. காமேஸ்வரராவ்

ராஜ சேவை

சங்கீதம்: டி. வி. ராஜா

பின்னணி: திருச்சி லோகநாதன், ஏ. எல். ராகவன், கண்டசாலா, எஸ். ஸி. கிருஷ்ணன், பி. சுசீலா, பி. லீலா, எஸ். ஜானகி.

மனேகரா (யாழ்ப்பாணம்)

முதலாளி

மாலை 6-30 இரவு 9-30 மணிக்கு

ராஜேந்திரன் - தேவிகா ராஜம் நடித்தது.

# பொலிசார் நடத்தைபற்றி விசாரணை

## பட்டிருப்பு எம்.பி. செய்த புகாரின் பயன்

கொழும்பு, புதன்

பெண் தொண்டர்கள் ஊர்வலமாகச் சென்றசமயம் மட்டக்களப்பிலுள்ள பொலிசார் சிலர் தங்கள் 'சாரங்கள்' காற்றில் பறக்கக்கூடியதாகக் கூத்தாடினர்கள் என்று பட்டிருப்பு எம். பி. திரு எஸ். எம். இராசமாணிக்கம் புகார் செய்தது சம்பந்தமாக விசாரணைநடத்த தான் உத்தரவிடப் போவதாக பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு டபிள்யு. எப். அபயகூன் தெரிவித்துள்ளார்.

"பெண் தொண்டர்கள் ஊர்வலமாகச் சென்றுகொண்டிருந்த சமயம் மட்டக்களப்புப் பொலிஸைச் சேர்ந்த சிலர் தங்கள் 'சாரங்கள்' காற்றில் பறக்கக்கூடியதாகக் கூத்தாடினர்கள்" என்று திரு எஸ். எம். இராசமாணிக்கம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கும் மட்டக்களப்பு பொலிஸ் சுப்ரின்டென்டனுக்கும், மட்டக்களப்பு அரசாங்க அதிபருக்கும் தந்திமூலம் அனுப்பிய புகாரில் குறிப்பிட்டுள்ளார்.

'இரண்டு நாட்களாக மட்டக்களப்பு பொலிசார் ஒழுங்கீனமாகவும் ஆபாசமாகவும் நடந்துகொள்வது சத்தியாக்கிரகிகளுக்கு கவலையளித்துள்ளது' என்று] திரு. இராசமாணிக்கம் தமது தந்தியில் தெரிவித்துள்ளார்.

பொலிசாரின் இந்த நடத்தையை மட்டக்களப்பு எம். பி. திரு செ. இராசதுரை கண்ணால் கண்டதாகத் தெரிவித்துள்ள திரு. இராசமாணிக்கம் ஏதாவது அசம்பாவிதங்கள் நேர்ந்தால் அதற்குப் பொலிசாரே காரணமென மட்டக்களப்பு மக்கள் கூறுவார்களென்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

### மேற்கு ஜேர்மனியில்

(2ம் பக்கத் தொடர்ச்சி)

கும் உரிமை கிடையாது. சோஷலிஸ ஜனநாயகக் கட்சி சில இராச்சியங்களில் நீண்டகாலமாகவே நிர்வாகம் நடத்தி வருகிற காரணமாகப் "பண்டஸ்ராட்" மூலம் மத்திய அரசாங்கம் செய்யும் முடிவுகளிலும் தன் செல்வாக்கைப் பிரயோகிக்கும்படியான நிலைமை இருந்து வருகிறது.

இம்மாதிரிக் கூட்டாட்சியால் அதிக செலவு ஏற்படுகிறது என்று குறை சொல்லப்படுகிறது. ஆனல் இந்த முறையால் அதிக நன்மை இருக்கிறதென்பது உணரப்பட்டிருக்கிறது. கூட்டாட்சி முறை ஜனநாயக ஆட்சிக்கு ஏற்றதாக இருப்பதுடன் ஒவ்வொரு கட்டத்திலும் நிர்வாகப் பொறுப்பு பரவலாக விநியோகிக்கப்படுகிறது. ஹாம்பர்க்கின் மேயராக தேர்ந்தெடுக்கப்பட்ட மேயர் டாக்டர் நெவர்மான் (சோஷலிஸ ஜனநாயகக் கட்சி) கூட்டாட்சி முறையே மிக அனுகூலமானதென்று கூறியிருக்கிறர். மேற்கு ஜேர்மனியில் கூட்டாட்சி முறை நன்கு வேரூன்றிவிட்டது. [உல்ரீக்கோர்ட்]

### மோகன்ராய் உருவப்படம்

லண்டன், மார்ச் 15

சரித்திரப் பிரசித்தி பெற்ற இந்திய சீர்திருத்தத் தலைவரான ராஜாராம் மோகன்ராயின் உருவப் படமொன்றை, பிரதமர் நேரு, லண்டனிலுள்ள இந்திய ஹைகமிஷன் காரியாலயத்தில் திறந்து வைத்தார்.

### ஆசிரியருக்கு கடிதம்

(2ம் பக்கத் தொர்ச்சி)

லும் பொருந்தாது. இதே போன்றுதான் வெலிமடை ராஜரத்ன எம். பி. தவருன கண்ணேட்டத்துடன் அவதானித்திருக்கிறர்.

திரு. ராஜரத்னவும் அவரின் பாரியாரும் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு விஜயம் செய்து நிலைமையை நேரில் பார்வையிடும்படி நான் கூற விரும்புகிறேன். அறிக்கை வெளியிடும் பிரமுகர்கள் தயவுகூர்ந்து நேரில் வந்து நிலைமையை அவதானித்தறிந்த பின்பு அறிக்கைகள் விடுவதே விரும்பத்தக்கது.

எம். ஏ. ஸி. எஸ். ஏ. காதர்
யாழ்ப்பாணம்.

### சத்தியாக்கிரகத்தில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ட்ட தொண்டர்கள் ஒவ்வொருவரும் ஆளுக்கு இரண்டு கொத்து அரிசிவீதம் கொண்டு வந்தனர். கச்சேரிமுன் வந்து குவிந்த சுமார் நான்காயிரம் கொத்து அரிசிப்பார்சல்கள் தமிழரசுக் கட்சியின் தலைமைக் காரியாலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

**இன்றைய மறியல்**

நேற்று மாலை தொடக்கம் இன்று மாலைவரை வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கத்தின் தலைமையில் மறியல்நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பெண்தொண்டர்கள் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் தலைமையில் மறியல் செய்கிறர்கள்.

வட்டுக்கோட்டைத் தொகுதியின் பலபாகங்களிலிருந்து இன்று கச்சேரிக்கு ஊர்வலங்கள் வருவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

### பங்கீட்டு அரிசி

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

சமாதான சத்தியாக்கிரகம் என்று அழைக்கப்படும் இயக்கம் பற்றி அரசாங்கம் பரிசிலனை செய்துவருகிறது. கச்சேரிகள்முன் மறியல் நடப்பதினல் அரசாங்க ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குதல், தருமப்பணம் வழங்குதல், விவசாயப் பொருட்கள் வழங்குதல், அரிசிப்பங்கீடு போன்ற கருமங்கள் தடைபட்டுள்ளன. இதனல் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இந்தக் கருமங்கள் தடைபடாமல் தொடர்ந்து நடைபெறுவதற்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ள அரசாங்கம் முடிவுசெய்திருக்கிறது. அவசியமானல் பொதுஜனப் பாதுகாப்புச் சட்டத்தின் மூன்ரும் பிரிவின் கீழ் அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்கும்.

செனட் சபையிலும் இம்மாதிரியான ஒரு அறிக்கையைச் செனட்டர் ஜயசூரியா சமர்ப்பித்தார்.

பாதுகாப்பு உள்விவகார அமைச்சு இன்று வடக்கு, கிழக்கு மாகாணங்களின் நிலைமை குறித்து வெளியிட்ட அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறது:

யாழ்ப்பாணத்தில் சத்தியாக்கிரகம் பொதுவாக அமைதியான சூழ்நிலையில் நடைபெறுகிறது.

மட்டக்களப்பில் பொதுவாக ஆர்ப்பாட்டங்கள் குறைந்துள்ளன. மட்டக்களப்பிலும், காத்தான்குடியிலும் உணவு நிலைமை கவலைக்கிடமான கட்டத்தை அடைந்திருக்கிறது.

கச்சேரிக்கு முன் சத்தியாக்கிரகம் நடைபெற்று வருவதால் தங்கள் சம்பளங்களைப் பெறுவது கஷ்டமாகவிருக்கிறது என்று அரசாங்க ஊழியர்களும், அதிகாரிகளும் அரசாங்க அதிபர்களுக்கு அறிவித்துள்ளார்கள்.

### சுப்ரீம்கோர்ட்டுக்கு பங்கீட்டரிசி வழக்கு

யாழ்ப்பாணம், வியாழன்

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்குப் பங்கீட்டரிசி வழங்குவதற்கு உணவுக் கமிஷனரை வற்புறுத்த வேண்டுமெனக் கோரிச் சுப்ரீம் கோர்ட்டில் வழக்குத்தொடர்வதற்குத் தமிழரசுக்கட்சி தீர்மானித்துள்ளதாகத் தெரியவருகிறது.

### இசைத்தட்டுகள் நிறுத்தப்பட்டது ஏன்?

#### வானெலி அதிபர் விளக்கம்

கொழும்பு, புதன்

இலங்கை வானெலியின் தமிழ் இசைத் தட்டுக்கள் ஒலிபரப்பப்படுவது நிறுத்தப்பட்டதற்கு இலங்கை வானெலி டைரக்டர் ஜெனரல் விளக்கம் கொடுத்துள்ளார்.

"நாட்டின் அமைதியைப் பாதுகாக்க வேண்டியது இலங்கை வானெலியின் தலையாய கடமை. நெருக்கடியை ஏற்படுத்தக் கூடிய அல்லது ஏற்கனவே நிலவுகின்ற நெருக்கடியைத் தூண்டிவிடக்கூடியவைகளை ஒலிபரப்பக்கூடாது" என்று டைரக்டர் ஜெனரல் திரு. ரெனி டி'மெல் கூறினர்.

இலங்கை வானெலியின் தமிழ்ப் பகுதியில் ஒலிபரப்பப்பட்ட சில பக்திப் பாடல்கள் உணர்ச்சியைக் கிளப்பிவிடக் கூடியதாக இருந்ததாகப் பொது மக்கள் தமக்குப் புகார் செய்ததாகத் திரு. மெல் தெரிவித்தார்.

சிறிளவு கசப்பேற்படுத்தக் கூடிய பாடல்களைக் கூட ஒலிபரப்புவதை இலங்கை வானெலி தவிர்க்க வேண்டுமென்று கூறியதிரு.மெல்பாடல்களை ஒலிபரப்புவதில்தவறில்லையென்றும் ஆனல் அவை வேறு நோக்கத்துக்காக ஒலிபரப்பப் படக் கூடாதென்றும் கூறினர்.

### பகிஷ்கார பிரசாரம் மூவர் கைது

கொழும்பு, புதன்

தமிழரையும், தமிழர் கடைகளையும் பகிஷ்கரிக்கும்படி தூண்டி துண்டுப் பிரசுரம் வழங்கியதாக, மருதானையைச் சேர்ந்த எச். பி. வியனகே, டி பத்திரான, டி. கே. ஜான் ரொட்ரிகோ என்ற மூவரை பொரளையில் பொலிசார் கைது செய்தனர். மாஜிஸ்திரேட் அவர்களை தலா ரூ. 250 பிணையில் விடுதலை செய்தார். வழக்கு ஏப்ரல் 23ந் திகதி விசாரணைக்கு வரும்.

கொழும்பு, புதன்

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் உணவு நிலைமைபற்றி நேற்றிரவு நடைபெற்ற மந்திரிசபையின் அவசரக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

கச்சேரிகளில் அனுமதிச் சீட்டுப் பெருமல் பங்கீட்டரிசி விநியோகிப்புபற்றியும் மந்திரிசபை விவாதித்தது.

## பலாலி கொலை வழக்கில் ஜூரிமார்சபை கலைக்கப்பட்டது

யாழ்ப்பாணம், வியாழன்

"நீதிநிர்வாகத்தில் தலையிடுவது பாரதூரமான குற்றமென்பதை இந்நாட்டு மக்களும், இப்பகுதி மக்களும் அறிந்துகொள்ள வேண்டும்" என்று நீதியரசர் என். சின்னத்தம்பி ஒரு வழக்கு விசாரணையின்போது குறிப்பிட்டார்.

1959-ம் ஆண்டு ஜூலை மாதம் 23ந் திகதி சட்ட விரோதமாகக் கூடியதாகவும் கந்தையா தர்மலிங்கத்தைக் கொலை செய்ததாகவும் பலாலி கிழக்கைச் சேர்ந்த பெரியதம்பி நல்லையா, சிதம்பரப்பிள்ளை கந்தையா, கந்தையா நவரத்தினம், செல்லப்பா நல்லையா, சிதம்பரப்பிள்ளை சரவணமுத்து ஆகியோர்மீது குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு வடமாகாண அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் என். சின்னத்தம்பி முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

முடிக்குரிய வழக்கறிஞர் திரு எஸ். சிவராசா வழக்கு விசாரணையை நடத்தினர். திரு ரி. தம்பிரத்தினத்தின் அனுசரணையுடன் திரு. வி. எஸ். பார்குமாரகுலசிங்கம் 1, 3, 4ம் எதிரிகளின் சார்பில் ஆஜரானர். திரு. ரி. குணரத்தினத்தின் அனுசரணையுடன் திரு வி. எம். தர்மலிங்கம் 2, 5ம் எதிரிகளின் சார்பில் ஆஜரானர். திரு. ஜே. ஜி. ஆசீர்வாதம் எதிரிகளின் சார்பில் ஆஜராக ஏற்படுத்தப்பட்டிருந்தார்.

கொலை நடைபெற்ற இடத்தை நீதியரசரும் ஜூரிமாரும் சென்று பார்வையிட்டனர்.

வழக்கு விசாரணை முடிவடையுந் தறுவாயில் நீதியரசர், ஜூரிகள் சபையைக் கலைத்துவிட்டு புதிய ஜூரிகள் முன் விசாரணை நடைபெற வேண்டுமென அறிவித்தார். ஜூரிமார் சபையைக் கலைப்பதுபற்றி நீதியரசர் பின்வருமாறு விளக்கம் கொடுத்தார்:

"தன்னைச் சந்தித்து தனது மனதை ஒரு வழிக்குத் திருப்புவதற்கு ஒருவர் எத்தனித்ததாக ஜூரிகளில் ஒருவர் அசைஸ் நீதிமன்றக் குமாஸ்தாவிடம் தெரிவித்ததாக குமாஸ்தா எனது கவனத்துக்குக் கொண்டுவந்தார். இந்த முயற்சி பாரதூரமான குற்றம். எனவேதான் வழக்கறிஞர்களுடன் ஆலோசனை செய்தபின் புதிய ஜூரிகள் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணை செய்யப்படவேண்டுமென முடிவு செய்தேன்."

### கச்சதீவு அந்தோனியார்

கச்சதீவு,புதன்

இம்முறை கச்சதீவு அந்தோனியார் திருநாள் வெகுவிமரிசையாக நடைபெற்றது.





ஏக விநியோகஸ்தர்கள்:

செட்டிநாட் கார்ப்பரேஷன் (பிரைவேட்) லிமிட்டெட்

116/118 கெய்சர் வீதி, : : கொழும்பு.


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 16-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.